**ஜூலை – 01**

# TNPSC துளிகள்

- ❖ லடாக்கின் லேயில் உள்ள ஹெமிஸ் மடாலயத்தில் ஹெமிஸ் திருவிழா 2026 தொடங்கியதுடன், திபெத்திய சந்திர நாட்காட்டியின் செ-சு (Tse-Chu) மாதத்தின் 10 வது நாளில் குரு பத்மசம்பவாவின் (குரு ரின்போச்சே) பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இது ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
- ❖ சிறுபான்மையினர் விவகார அமைச்சகமானது 2026 ஆம் ஆண்டு ஜூன் 22 அன்று ஹஜ் கொள்கை 2027-ஐ அறிவித்ததுள்ள நிலையில், இந்திய ஹஜ் குழு (HCoI) இணையதளம் மற்றும் ஹஜ் சுவிதா செயலி மூலம் விண்ணப்பங்கள் திறக்கப்பட்டுள்ளன.
  - ஹஜ் என்பது சவுதி அரேபியாவின் மக்காவிற்கான வருடாந்திர புனிதப் பயணம் ஆகும் என்பதோடு மேலும் இது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகும்.
- ❖ மத்தியப் பிரதேசத்தில், இந்தூரின் மால்வி உருளைக்கிழங்கு, ரத்லாமின் கராடு (ஒரு வகை கிழங்கு) மற்றும் பாலம் கக்டி (வெள்ளரி), மாண்டுவின் (தார் மாவட்டம்) புகழ்பெற்ற பாபாப் (Baobab) மரப் பழம் ஆகியவற்றிற்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப் பட்டுள்ளது.
- ❖ அர்ஜென்டினாவின் படகோனியாவில் உள்ள குட்ரல் கோ நகரில் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியின் 85 அடி உயர சிலை திறக்கப்பட்டுள்ளதுடன் இது கொல்கத்தாவில் (மேற்கு வங்கம்) முன்பு நிறுவப்பட்ட 70 அடி சிலையை விஞ்சி, உலகின் மிக உயரமான மெஸ்ஸி சிலையாக மாறியுள்ளது.
- ❖ நிபே லிமிடெட் நிறுவனம் உருவாக்கிய, இந்தியாவின் மிகவும் கனமான உள்நாட்டு 120-மிமீ வாகனத்தில் பொருத்தப்பட்ட மின்னியற்றி அமைப்பான 'கருடாஸ்த்ரா' மத்தியப் பிரதேசத்தில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் பங்கனப்பள்ளி மாம்பழங்களின் 5 மெட்ரிக் டன் சரக்குகளை இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு கடல் வழியாக வணிக ரீதியாக ஏற்றுமதி செய்வதற்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) வசதி செய்துள்ளது.
  - பங்கனப்பள்ளி (பெனிஷான்) என்பது ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 2017 ஆம் ஆண்டில் புவிசார் குறியீட்டைப் (GI) பெற்ற ஒரு பிரீமியம் மாம்பழ வகையாகும்.
- ❖ அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்ற 2வது பாக்ஸ் சிலிக்கா உச்சி மாநாட்டில் இந்தியா உட்பட 35 நாடுகள் செயற்கை நுண்ணறிவு வாய்ப்புகள் குறித்த கூட்டறிக்கையில் கையெழுத்திட்டன.
  - இந்த அறிக்கை புதுமையான AI நிர்வாகம், நம்பகமான விநியோகச் சங்கிலிகள் மற்றும் AI தொடர்பான தொழில்நுட்பங்களுக்கான வலுவான தொழில்துறை திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு ஜவுளி ஏற்றுமதி இலக்கு 2030

- ❖ மத்திய அரசு 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டிலிருந்து 21 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதியை இலக்காக நிர்ணயித்துள்ளது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலர் ஜவுளி மற்றும் ஆடை

ஏற்றுமதியை எட்ட இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது என்ற நிலையில் இதில் ஐந்தில் ஒரு பங்கை தமிழ்நாடு வழங்கும்.

- திருப்பூர் ஜவுளித் தொகுப்பு மட்டும் 11.5 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தொழில்துறை தொகுப்புகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்காக ₹1,250 கோடி மதிப்பிலான திட்டத்தின் கீழ் "தோழி விடுதிகளை" தமிழ்நாடு அரசு கட்ட உள்ளது.
- திருப்பூரில் தடகள ஆடைகளுக்கான சிறப்பு மையம் ஒன்றும் நிறுவப்பட உள்ளது.





# தேசியச் செய்திகள்

## ஹப்-அண்ட்-ஸ்போக் விமானப் போக்குவரத்து மாதிரி


- 2 மற்றும் 3-ஆம் நிலை நகரங்களிலிருந்து சர்வதேச விமான இணைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா 2026 ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று ஹப்-அண்ட்-ஸ்போக் (Hub-and-Spoke) விமானப் போக்குவரத்து மாதிரியை அறிமுகப்படுத்தியது.
- ஏர் இந்தியா ஈஸி கனெக்ட் திட்டத்தின் கீழ் புது தில்லி வழியாக சர்வதேச இடங்களுக்கு பயணிகளை இணைக்கும் முதல் சேவை வாரணாசியில் இருந்து தொடங்கியது.
- இந்த மாதிரியின் கீழ், பயணிகள் ஒரு முக்கிய மைய விமான நிலையம் வழியாகச் செல்வதற்கு முன்பு புறப்படும் விமான நிலையத்திலேயே குடிவரவு/குடியேற்றம் மற்றும் பயணப் பொருட்கள் தொடர்பான நடைமுறைகளை முடித்துக்கொள்வார்கள்.
- அடையாளம் காணப்பட்ட மைய விமான நிலையங்கள் டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகும் என்பதோடு இந்த வலையமைப்பு நாக்பூர் உட்பட 30 விமான நிலையங்களுக்கு விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- உள்நாட்டு விமான நிலையங்கள் மூலம் சர்வதேச இணைப்பை மேம்படுத்துவதன்

வாயிலாக 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை உலகளாவிய விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அணுக்கரு வெப்ப அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை 2026

- அணுசக்தித் துறையானது (DAE) தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள IGCAR இல் அணுக்கரு செயல்முறை வெப்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி வசதியை 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் திறந்தது.
- இந்த ஆலை வேக ஈனுலை சோதனை மையத்திலிருந்து (FBTR) கிடைக்கும் வெப்பத்தால் இயங்கும் தாமிரம்-குளோரின் (Cu-Cl) வெப்பவேதியியல் சுழற்சியைப் பயன்படுத்துகிறது.
- கார்பன் இல்லாத ஹைட்ரஜன் உற்பத்திக்கான தொழில்நுட்ப விளக்க மாதிரியாக பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் (BARC) இது உருவாக்கப்பட்டுள்ளது.
- அணுக்கரு அடிப்படையிலான ஹைட்ரஜன் உற்பத்தியை சரிபார்ப்பதும், எதிர்கால வணிக அளவிலான தூய்மையான எரிசக்தி பயன்பாடுகளை ஆதரிப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- அணு உலை வெப்பத்தை Cu-Cl ஹைட்ரஜன் உற்பத்தி தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கும் உலகளாவிய முதல் ஆலை இதுவாகும்.




## 16 மருந்துக் கலவைகள்

- மருத்துவ ரீதியான நியாயப்படுத்தல் இல்லாமை மற்றும் பாதுகாப்பு குறித்த

கவலைகள் காரணமாக, 1940 ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் பிரிவு 26A இன் கீழ் 16 நிலையான மருந்துக் கலவைகளை (FDCs) இந்திய அரசு தடை செய்துள்ளது.

- மனிதப் பயன்பாட்டிற்கான இந்த மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை உடனடியாகத் தடை செய்வதற்கான அறிவிப்புகளை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- அபாயங்கள் மற்றும் நன்மைகள் குறித்த அறிவியல் மதிப்பீட்டிற்குப் பிறகு நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- தடை செய்யப்பட்ட கலவைகளில் வலி நிவாரணி, நுண்ணுயிர் எதிர்ப்பு பொருட்கள், தோல் மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் தசைப்பிடிப்புத் தடுப்பு சிகிச்சைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகள் அடங்கும்.
- பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் அறிவியல் பூர்வமாக சரி பார்க்கப்பட்ட மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்வதும், இந்தியாவில் பகுத்தறிவு சார்ந்த மருந்து பயன்பாட்டை ஊக்குவிப்பதும் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.



INDIA BANS 16 FIXED-DOSE DRUG COMBINATIONS

OVER SAFETY CONCERNS

The Government of India has banned 16 Fixed-Dose Drug Combinations (FDCs) due to safety concerns and lack of therapeutic justification.

| No. | BANNED FIXED-DOSE DRUG COMBINATION |
|---|---|
| 1 | Acetyl Salicylic Acid + Ethoheptazine |
| 2 | Amoxicillin + Serratiopeptidase + Lactobacillus Sporogenes |
| 3 | Dicyclomine + Paracetamol + Clidinium Bromide + Chlordiazepoxide |
| 4 | Amoxicillin + Serratiopeptidase |
| 5 | Aloe Extract + Allantoin + Alpha Tocopherol Acetate + D-Panthenol + Vitamin A |
| 6 | Aloe Vera + Jojoba Oil + Wheat Germ Oil + Tea Tree Oil |
| 7 | Aloe Extract + Vitamin E + Dimethicone + Glycerine |
| 8 | Aloe Vera + Jojoba Oil + Vitamin E |
| 9 | Aloe Vera + Orange Oil |
| 10 | Aloe Vera + Vitamin E + Herbal Preparation |
| 11 | Aloe Vera + Tea Tree Oil |
| 12 | Aloe Vera + Vitamin E + Tea Tree Oil |
| 13 | Aloe Vera + Wheat Germ Oil + Tea Tree Oil |
| 14 | Aloe Vera + Jojoba Oil + Olive Oil + Vitamin E |
| 15 | Aloe Vera + Vitamin E + Olive Oil |
| 16 | Aloe Vera + Olive Oil |

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் எரிசக்தி அமைச்சர்கள் கூட்டம் 2026

- 11-வது பிரிக்ஸ் எரிசக்தி அமைச்சர்கள் கூட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஹரியானாவின் குருகிராமில் இந்தியா நடத்தியது.
- பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் இந்தோனேசியா) உறுப்பினர்களிடையே எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக மின்சார அமைச்சகத்தால் இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

- "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்ற பிரிக்ஸ் கருத்துருவுடன் இணைந்து, இந்தியாவின் ஆற்றல் கண்காணிப்புக் கருத்துரு "சர்வேஷம் ஊர்ஜம்" (அனைவருக்கும் ஆற்றல்) என்பதாகும்.
- விரிவாக்கப்பட்ட சூரிய சக்தி திறன், 60 மில்லியனுக்கும் அதிகமான திறன் மீட்டர்கள், பசுமை ஆற்றல் வழித்தடங்கள் மற்றும் ஒரே சூரியன் ஒரே உலகம் ஒரே தொகுப்பு (OSOWOG) முன்னெடுப்பு போன்ற சாதனைகளை இந்தியா இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தும்.
- பிரிக்ஸ் நாடுகளிடையே தூய்மையான எரிசக்தி, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இக்கூட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்





- 2002 ஆம் ஆண்டின் உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் கீழ் அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களை அறிவிப்பதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) தேசியப் பல்லுயிர் ஆணையம் (NBA) வெளியிட்டது.

- அறிவியல் பூர்வமான மதிப்பீடு, பங்குதாரர்களின் ஆலோசனை, சரிபார்த்தல், அறிவிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமிடல் ஆகியவற்றிற்கான படிப்படியான செயல் முறையை இந்த SOP வழங்குகிறது.
- உயிரினங்களை அடையாளம் காண அறிவியல் சான்றுகள், கள ஆய்வுகள் மற்றும் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்துமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை இது அறிவுறுத்துகிறது.
- பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள், இந்தியத் தாவரவியல் மதிப்பாய்வு மற்றும் இந்திய விலங்கியல் மதிப்பாய்வு ஆகியவை இச்செயல்முறையில் ஈடுபட்டுள்ளன.
- இந்தியா முழுவதும் அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களின் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் காலமுறை மதிப்பாய்வுக்கு இது துணைபுரிகிறது.

## நியோகோலோ-கோபா தேசியப் பூங்கா பாதுகாப்பு முன்னெடுப்பு

- நியோகோலோ-கோபா தேசியப் பூங்காவில் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) முன்னெடுக்கும் புதிய பாதுகாப்பு முன்னெடுப்பிற்கு உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) அமைப்பானது 1.26 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- செனகலில் உள்ள நியோகோலோ-கோபா தேசியப் பூங்காவில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை வலுப்படுத்துவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நியோகோலோ-கோபா தேசியப் பூங்கா என்பது தென்கிழக்கு செனகலில் அமைந்துள்ள ஒரு யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் மற்றும் உயிர்க்கோளக் காப்பகம் ஆகும்.
- இந்தப் பூங்கா சுமார் 913,000 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் இது சூடானிய சவன்னா சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- 2007-ஆம் ஆண்டில் ஆபத்தான நிலையில் உள்ள யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் இந்தப் பூங்கா சேர்க்கப்பட்டிருந்தது, ஆனால் பாதுகாப்பு முயற்சிகளுக்குப் பிறகு 2024-ஆம் ஆண்டில் இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.




# மாநிலச் செய்திகள்

## பொது சிவில் சட்ட மசோதா - மேற்கு வங்கம்

- மேற்கு வங்க அரசு பொது சிவில் சட்ட (UCC) மசோதாவை பட்ஜெட் கூட்டத்தொடரின்

போது மாநில சட்டப் பேரவையில் தாக்கல் செய்யவுள்ளது.

- ❖ மதம் பாராமல் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் தத்தெடுப்பு ஆகியவற்றுக்கான பொதுவான சட்டங்களை இம்மசோதா முன்மொழிகிறது.
- ❖ பலதார மணத்திற்கான தடை, குழந்தைத் திருமணங்களைச் செல்லாததாக்குதல் மற்றும் திருமணமற்ற (live-in) உறவுகளைக் கட்டாயமாகப் பதிவு செய்தல் போன்ற விதிகள் இந்த வரைவில் அடங்கும்.
- ❖ இந்திய அரசியலமைப்பின் 44வது சரத்து, பொது சிவில் சட்டத்தை (UCC) அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் (DPSP) கீழ் வைக்கிறது.
- ❖ இது இயற்றப்பட்டால், உத்தரகாண்ட், குஜராத் மற்றும் அசாமைத் தொடர்ந்து பொது சிவில் சட்டத்தை (UCC) அமல்படுத்தும் நான்காவது மாநிலமாக மேற்கு வங்கம் மாறும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகின் சிறந்த பள்ளிக்கான பரிசுகள் 2026

- ❖ 'உலகின் சிறந்தப் பள்ளிக்கான பரிசுகள் 2026' என்ற விருதிற்கு ஏழு இந்தியப் பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பதோடு ஒரே ஆண்டில் எந்தவொரு நாட்டிலிருந்தும் அதிகபட்ச எண்ணிக்கையில் பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.
- ❖ T4 எஜுகேஷன் அமைப்பால் இந்த விருதுகளானது புத்தாக்கம், சமூக ஒத்துழைப்பு, சுற்றுச்சூழல் செயல்பாடு, சவால்களை முறியடித்தல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஆதரவளித்தல் ஆகிய ஐந்து பிரிவுகளில் வழங்கப்படுகின்றன.
- ❖ PCMC சத்ரபதி ஷாஹுஜி மகாராஜ் ஆங்கில வழிப் பள்ளி (புனே), ஆர்மிகுட்வில் பள்ளி வுசூர் (அனந்த்நாக்), ஹெல்தி பிளானட் TGA ஏர்லி இயர்ஸ் பள்ளி (நொய்டா), இன்வென்ச்சர் அகாடமி (பெங்களூரு), சேத் எம்.ஆர்.ஜெய்ப்பூரியா பள்ளி (லக்னோ), யூரோஸ்கூல் பன்னேருகட்டா (பெங்களூரு) மற்றும் சேத் ஆனந்த்ராம் ஜெய்ப்பூரியா பள்ளி (லக்னோ) ஆகியன பட்டியலில் உள்ள இந்தியப் பள்ளிகளாகும்.
- ❖ வெற்றியாளர்களை நிபுணர் தீர்ப்பாயக் குழு தேர்ந்தெடுக்கும், அதே வேளையில் உலகளாவிய பொது வாக்கெடுப்பு மூலம் 'சமூகத் தேர்வு விருது' முடிவு செய்யப்படும்.
- ❖ இறுதியாளர்கள் மற்றும் வெற்றியாளர்கள் 2026 ஆம் ஆண்டு நவம்பரில் அறிவிக்கப்

படுவார்கள் என்பதோடு மேலும் தேர்வு செய்யப் பட்ட பள்ளிகள் 2027 ஆம் ஆண்டு ஜனவரியில் லண்டனில் நடைபெறும் உலகப் பள்ளிகள் உச்சி மாநாட்டில் பங்கேற்கும்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச செவித் திறன் மற்றும் பார்வை குறைபாடுடையோர் விழிப்புணர்வு தினம் 2026 – ஜூன் 27





- 2025 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் (UN) பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தைத் தொடர்ந்து இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- காது கேளாமை மற்றும் பார்வையற்ற தன்மையை ஒரு தனித்துவமான குறைபாடாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதையும், அக்குறைபாடு உள்ளவர்களின் உள்ளடக்கம், அணுகல், சம உரிமைகள் மற்றும் சுதந்திரமான வாழ்க்கையை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புகழ்பெற்ற காதுகேளாத-பார்வையற்ற எழுத்தாளரும் ஆர்வலருமான ஹெலன் கெல்லரின் (1880–1968) பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் ஜூன் மாதம் 27 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- காது கேளாமை மற்றும் பார்வையற்ற தன்மை என்பது பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடு இணைந்த ஒரு நிலையாகும். இதற்கு தொழில்முறை சைகை மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் உட்பட சிறப்பு ஆதரவு தேவைப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Connected by Touch: Breaking Barriers, Building Bridges" என்பதாகும்.

## சர்வதேச சிறுகோள் தினம் 2026 - ஜூன் 30

- பூமியில் பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய சிறுகோள் தாக்கமான, ரஷ்யாவின் சைபீரியாவில் 1908ம் ஆண்டில் நிகழ்ந்த துங்குஸ்கா சிறுகோள் தாக்கத்தின் ஆண்டு நிறைவை இந்த நாள் குறிக்கிறது.
- பூமிக்கு அருகிலுள்ள பொருட்கள் (NEOs) குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிப்பதையும், சிறுகோள் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து பதிலளிப்பதற்கான உலகளாவிய முயற்சிகளை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறுகோள் தாக்கத்தினால் ஏற்படும் அபாயங்களையும் இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) 2016-ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தின் மூலம் இந்தத் தினத்தை அறிவித்தது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Planetary Defence and Asteroid Impact Hazards" என்பது ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★